**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **SC.No. 03/2009**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution** அ**.**சா**.16**
**Defence**
**Court**

**Name** **:** அப்துல்பாரிக்

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 28.12.2022

**முதல் விசாரணை**:

நான் தற்போது தென்காசியில் குடியிருக்கிறேன். முன்பு அரிப்புக்காரதெருவில் குடியிருந்துவந்தேன். நான் இதற்கு முன்னர் அலிதஸ்மா என்ற பலசரக்கு கடை வைத்து வியாபாரம் செய்தேன். அது மேலமுத்தாரம்மன் கோவில் அருகில் இருநதது. பொதுவாக காலை 10.00 மணிக்கு கடையை திறந்து இரவு 9.00 மணிவரை கடை வைத்திருப்பேன்.

குமார் பாண்டியன் என்பவர் கொலை செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியாது. எங்கள் ஊரை சேர்ந்த அலாவுதீன் என்பவரை முன்னதாகவும், தற்போதும் தெரியாது. ஆஜர் எதிரிகளையும் தெரியாது. சம்பவம் நடந்த தேதியன்று எனது மனைவிக்கு உடல்நலம் சரியில்லாத காரணத்தினால் அவரை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றேன். அதனால் அன்று கடை திறக்கவில்லை. சம்பவத்தில் இறந்துபோன அசன் கனி என்பவரை எனக்கு தெரியாது. மறுநாள் கடையை திறந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் மேலேகண்டவிபரப்படி தான் நான் கூறினேன். நான் எந்த கட்சியிலும், அமைப்பிலும் உறுப்பினராக இல்லை. 2007 ம் வருடம் பசீர் , அசன்கனி , நாகூர் மீரான் ஆகியோர்கள் இறந்தது சம்பந்தமாக எதுவும் தெரியாது.

**இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது**:-

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் போலீசார் விசாரித்தபோது எங்கள் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் உட்பட பலரும் தென்காசி அம்மன் சன்னதி தொழுகை பள்ளி வாசலை புதிதாக எடுத்து கட்ட நாங்கள் ஏற்பாடு செய்துகொண்டிருந்தபோது தென்காசி இந்து முன்னனி தலைவர் குமார் பாண்டியன் அதற்கு தடையாக இருந்து வந்ததாகவும், அதன் தொடர்ச்சியாக 2006 ம் ஆண்டு டிசம்பர் 6 ம் தேதி பாபர் மசூதி இடிக்கப்பட்ட தினத்தை நாங்கள் கருப்பு தினமாக அனுசரித்தபோது இந்து முன்னனி தலைவர் குமார்பாண்டியன் இந்து எழுச்சி நாளாக அறிவித்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியதாகவும் அதனால் அதற்கு நடவடிக்கை எடுக்க பள்ளிவாசலை சேர்ந்த நபர்களும் நாங்களும் ஆலோசனை செய்தோம் என்றும் அதன் தொடர்ச்சியாக 17.12.2006 ம் தேதி

குமார் பாண்டியனை எங்களது தரப்பை சேர்ந்த ஹனிபா, அப்துல்லா, செய்யது சுலைமான்சேட் கொலை செய்தனர் என்றும் அவ்வாறு கொலை செய்ததற்கு பழியாக இந்து அமைப்பை சேர்ந்தவர்கள் தமுமுக தலைவர் மைதீன் சேட்கானை வெட்டி கொலை செய்ய முயற்சித்து வந்தனர் என்றும் இந்நிலையில் ஹனிபாவும், அப்துல்லாவும் பிணையில் வெளிவந்துவிட்டார்கள் என்றும் அவர்கள் மகளிர் காவல் நிலையத்தில் கையொப்பம் இட சென்றபோது அவர்களுக்கு பாதுகாப்பாக ஆட்டோவில் சிலர் சென்று வருவார்கள் என்றும் போலீசர் விசாரனையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. கடந்த 14.08.2007 தேதி காலை 10.15 மணிக்கு நான் என் கடையின் முன்னால் ரோட்டில் நின்றுகொண்டிருந்தபோது நிபந்தனை கையொப்பம் போட்டுவிட்டு இருசக்கரவாகனம் மற்றும் ஆட்டோக்களில் அனிபாவும், முருகேசன் என்ற அப்துல்லாவும் கையொப்பம் செய்துவிட்டு திரும்ப வந்துகொண்டிருந்தபோது மீரான் மைதீன் மகன் அலாவுதீன் TN 72 x0558 என்ற யமஹாபைக்கிலும் TN76b9579, TN 76B 4974 என்ற ஆட்டோக்களில் அபுஅயூப்அன்சாரி , செய்யது அலி, முருகேசன் என்ற அப்துல்லாவும், முகமது பசீர் அசன்கனி, நாகூர்மீரான், மசூது, மற்றும் சிலரும் சுமார் 10.15 மணியளவில் தென்காசி எல்ஆர்எஸ்பாளையம் கூலக்கடை பஜாரை கடந்து மவுண்ட் ரோடு என்ற பகுதியில் கிழக்கு நோக்கி சென்றுகொண்டிருநதபோது முத்தாரம்மன் கோவில் அருகில் TN 72 Z 9757 என்ற வெள்ளை நிற அம்பாசிடர்காரை குமார்பாண்டியனின் சகோதரர்ககள் செந்தில், சக்தி பாண்டியன், கபிலன், சுப்பிரமணியன், சுரேந்திரன் ஆகியோர் முன்னால் சென்ற யமாகா பைக்கின் மீது மோதி அந்த ஆட்டோவை வழி மறித்து அரிவாளுடன் காரில் இருந்து இறங்கி வெட்டுங்கள், கொல்லுங்கள் என்று சக்தி பாண்டியன் கூற

மற்றவர்களும் ஓடிவந்தனர் என்றும் உடன் வந்தவர்கள் அங்கிருந்து மேற்காக ஓடியபோது முத்து டீக்கடை அருகில் இருந்த சேகர், மலையப்பன், தட்சணாமூர்த்தி, குட்டிமணி, சுரேஷ், பிஸ்தாமணி, சக்தி, கேபிள் டீவி முத்து, ஆட்டோ ரமேஷ், தங்கதுரைஅலெக்சாண்டர், இளநீர்கண்ணன், ஆகியோரும் அவர்களை சுற்றி வளைத்து தாக்கினார்கள் என்றும் அப்போது சுரேஷ் அரிவாளால் சைய்யது அலியை கழுத்தின் வலது பக்கம் மாறி மாறி வெட்டினார் என்றும் அபுஅயூப்அன்சாரி என்பவரை குட்டிமணி என்பவர் அரிவாளால் முதுகில் மாறிமாறி வெட்டினார் என்றும் கேபிள் டீவி முத்து அலாவுதீனின் தலையிலும், மீரான் மைதீன் வலது மார்பிலும் மாறி மாறி வெட்டினார் என்றும் சுரேஷ் அரிவாளால் முகமது பசீர் மற்றும் சிலர் மாறி மாறி வெட்டினார் என்றும், தங்கதுரை ராஜாமுகம்மதுவை வெட்டினார் என்றும் அலெக்சாண்டர் அரிவாளால் நாகூர் மீரான் அசன்கனி ஆகியோர்களை வெட்டினார் என்றும் சக்தி பாண்டியன் முகமது பசீரின் தலையில் மாறி மாறி வெட்டினார் என்றும் சுரேந்திரன் அரிவாளார் முகம்மது பசீரின் தலையிலும் அசன்கனியின் வலது விலா மற்றம் தொடை பகுதியில் வெட்டினார் என்றும் மலையான் தெருவை சேர்ந்த சண்முகம் இருப்பு பட்டையால் அப்துல்லாவின் முகத்திலும் தலையிலும் மாறி மாறி அடித்தார் என்றும் செந்தில் அரிவாளால் அசன்கனியை வெட்டினார் என்றும் பிஸ்தாமணி என்பவரும் அரிவாளால் அசன் கனி, மற்றும் முகம்மது பசீர் ஆகியோர்களை வெட்டினார் என்றும் சேகர் அரிவாளால் அசன்கனியை மாறி மாறி வெட்டினார் என்றும் அந்த சம்பவத்தில் எதிரிகள் தரப்பில் சுரேஷ், செந்தில் என்ற செந்தில் குமார், சேகர் ஆகியோர் இறந்ததாக கேள்விப்பட்டேன் என்றும், கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த சம்பவத்தில் அபுஅயூப்அன்சாரி, சைய்யது அலி, அலாவுதீன், முருகேசன்

என்ற அப்துல்லா, இராஜாமுக்கமது, நவாஸ், ஹனிபா ஆகியோர்களுக்கும் வெட்டுக்காயங்கள் ஏற்பட்டது என்றும் போலீசார் விசாரித்தபோது கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்துபோன அசன்கனி என்ற ராஜா சடலத்தின் மீது தென்காசி காவல் ஆய்வாளர் பிரேத விசாரணை நடத்தினார் என்றும் அப்போது இறந்துபோன அசன்கனியை நான் அடையாளம் காட்டி அவர் இறப்புக்கான காரணம் குறித்தும் கூறினேன் என்றும் சொன்னால் சரியல்ல. சக்திபாண்டியன் வகையறா இஸ்லாமியர் மீது கொடுத்த புகாரில் இஸ்லாமியர்கள் இந்நீதிமன்றம் ஆஜராகி வருகிறார்கள் என்றால் அதுபப்றி எனக்கு தெரியாது. எங்கள் சமுதாயத்தினருக்கும் ,எதிரிகளுக்கும் ஏற்பட்ட ரகசிய உடன்படிக்கையின் படி நாங்கள் அந்த வழக்கில் இருந்து இஸ்லாமியர்களை விடுவித்துக்கொள்ளவும், எதிரிகள் மீதான வழக்கில் இருந்து அவர்கள் தப்பிக்கவும் போலீசார் விசாரணையின் போது கூறிய விபரங்களை மறைத்தும் சம்பவம் நடந்தபோது நான் சம்பவ இடத்தில் இருந்த விபரங்களை மறைத்தும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>**